பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஆடு ஐப்பசி மீ 30 உ வெள்ளிக்கிழமை (16 · 11 · 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 6 கதிர் 254

# காரைநகர் குடியிருப்புகள் மீது கண்டபடி ஷெல் தாக்குதல்கள்!

## மோதலில் 6 சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், நவம்பர் 16

காரைநகர் - சீநோர் இராணுவ முகாமிலிருந்து நேற்று சிப்பாய்கள் முன்னேற முற்பட்டபோது, விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களைப் பின்வாங்கச் செய்தனர். இந்தத் தாக்குதலில் ஆறு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

இதனை அடுத்து காரைநகர் கடற்படை முகாம், சீ-நோர் இராணுவ முகாம் ஆகியவற்றிலிருந்து காரைநகர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காலை 6 மணியளவில் சீநோர் இராணுவ முகாமிலிருந்த சிப்பாய்கள் கிழக்கு றோட் வழியாக - வயல்களினூடே-சுருங்காலிப் பக்கமாக காரைநகர் டிப்போவை நோக்கி முன்னேற முயன்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து பெண்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 16

காரைநகரில் சீநோர் கட்டடத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரும், கடற்படையினரும் நேற்றுக் காலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உட்பட ஐவர் உயிரிழந்தனர். இந்த ஐவரில் 3 வயதுக் குழந்தை ஒன்றும் அடங்கும். உயிரிழந்த ஐவரும் பெண்கள் ஆவர். நேற்றைய ஷெல் தாக்குதலில் இன்னும் பலர் காயமடைந்தனர்.

மணற்காட்டைச் சேர்ந்த ஐயாத்துரை பராசக்தி (45 வயது), அவரது மகளான ஐ ரஞ்சிதமலர் (29 வயது),

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரச படையுடன் இணைந்து செயற்படும் தமிழ் குழுக்கள்

ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ் இயக்கங்கள் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து கிழக்கில் செயற்படுகின்றன.

- இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று செய்தியாளரிடம் சொன்னார்:

பாதுகாப்புப் படையினருடன் அந்த இயக்கங்கள் சேர்ந்து பணியாற்றுவதால் தான் அப்பகுதிகளில் தமிழர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்றும்-

அப்படி உதவும் இயக்கங்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

## பட்ஜட்: காசோலை வரி உயர்வு; தனியார் ஊழியருக்கு சலுகை

கொழும்பு, நவ. 16

பிரதமரும், நிதி அமைச்சருமான டி.பி விஜேதுங்கா நேற்று நிகழ்த்திய வரவு - செலவுத்திட்ட உரையில் விலை உயர்வு எதுவும் அறிவிக்கப்படவில்லை.

வரவு - செலவில் துண்டு விழும் 670 கோடி ரூபாவைச் சரிக்கட்ட எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை அவர் விவரித்தார்.

அவற்றில் முக்கியமான சில வருமாறு:-

★ இறக்குமதிப் பொருள்கள் மீதான 5வீத சுங்கத் தீர்வை நீக்கப்பட்டுள்ளது.

★ வருமானவரி செலுத்துவோர் மீது விதிக்கப்பட்ட 15 சதவீத மேலதிக வரி இன்னும் ஓராண்டு காலத்துக்கு நீடிக்கும்.

★ ட்ராக்டர் தவிர்ந்த ஏனைய பொருள்கள் மீதான சுங்கவரியும் இன்னும் ஓராண்டு நீடிக்கும்.

★ காசோலை மீதான வரி ஒரு ரூபாவாக அதிகரிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அரச ஊழியர் யாழ். நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ 16

கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்கள் நேற்றுக்காலை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நல்லூர் ஸ்தான சி.சி. பாடசாலையில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் இருநூறுக்கும்மேற்பட்ட ஆண், பெண் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

பதாகைகளும், சுலோக அட்டைகளும் தாங்கியபடி அரசுக்கு எதிரான கோஷங்களையும் அவர்கள் எழுப்பிச் சென்றனர்.

''சிங்கள அரச ஊழியர்களுக்குச் சலுகை, தமிழ்

[4ஆம் பககம் பார்க்க]

## வரணி உட்பட தென்மராட்சியில் நேற்று அகோர வான் தாக்கு

தென்மராட்சி. நவ. 16

தென்மராட்சியில் வரணி, மிருசுவில் வடக்கு, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை அகோர விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சீனச்சகடை, பொம்மர்கள், அவ்ரோ, ஹெலி என்பன இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டன.

வரணியில், எருவன் பகுதியில் பொம்மர்கள் மாறி, மாறி குண்டுகளை வீசின. இப்பகுதியிலுள்ள தென்னந் தோட்டங்களிலும், வெளிகளிலும் பல குண்டுகள் விழுந்து வெடித்தன.

இதனால் இப்பகுதியில் பல தென்னை மரங்கள், மா, பலா போன்றவை நாசமாகின.

குண்டு வீச்சினால் சிலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். வரணியைச் சேர்ந்த வே. சர்வானந்தன் என்பவரும் அவர்களில் ஒருவர்.

மிருசுவில் பகுதியிலும் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன. அப்பகுதியில் அவ்ரோ வீசிய குண்டுகளில் இரண்டு வெடிக்கவில்லை. வரணியில் சீனச்சகடை

[4ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி பகுதிக்கும் கப்பல் மூலம் உணவு?

கிளிநொச்சி, நவ. 16

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொழும்பில் இருந்துலொறிமூலம்கொண்டு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களைக் கப்பல் மூலம்முல்லைத்தீவுக்கு கொண்டுவந்து அங்கிருந்து கிளிநொச்சிக்கு எடுத்து வருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி செயலக உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

மடு - தம்பனைவீதிபோக்குவரத்துக்குஏற்றதாக இல்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு உடன் இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் போதிய அளவு இரத்தம் இல்லாததால், இராணுவத் தாக்குதல்களால் காயமுற்று அனுமதிக்கப்படுவோருக்குச் சிகிச்சை அளிக்க முடியாதிருக்கிறது.

காரைநகரில் நடந்த தாக்குதல்களில் படுகாயமுற்ற மக்கள் நேற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட போது இரத்தம் போதாத கஷ்ட நிலை ஏற்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் இல்லை. ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது. ஜெனரேட்டரை நம்பி அதிகளவு இரத்தத்தை சேமித்து வைப்பது [illegible]மானதல்ல. அதனால் [illegible]

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'சென்ட்ரல் காம்ப்' காவல் அரண்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தன!

### 3 சிப்பாய்கள் பலி; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 16

நேற்று அதிகாலை 2 30 மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சென்ட்ரல் காம்ப் இராணுவ முகாமின் ஆறு காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடத்தினர்.

[illegible] சிப்பாய்கள் உயிரிழந்தனர். ஆறு காவல் அரண்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

பெரும்பான்மை இனத்தவர்கள் அதிகமாக வாழும் பகுதியில் அமைந்துள்ள இந்த முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து அங்கிருந்த சிப்பாய்கள் வேறு முகாம் ஒன்றுக்கு ஓடித் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

6. எம். எம். மோட்டார் -1, ஷெல் -1, 'பரா' ஷெல்

[4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [14550]

### வாங்கலாம், விற்கலாம்

நாள்தோறும் திறந்திருக்கும்: பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House, 18/6, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் லேன், யாழ்ப்பாணம். (14720)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை; பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### அண்ணாகோப்பி

மீண்டும் மேற்படி ஸ்தாபனம் இல 4 நவீன சந்தையில் 13-11-90 முதல் இயங்குகிறதென்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். அண்ணா கோப்பி தயாரிப்புகளை பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். (சி/5416)

### சில்வா வாச் வேக்ஸ்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் இல 10, மக்கள் நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 12 - 11 - 90 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம். (14768)

### தேவை

ஐந்து வருடத்துக்குக் குறையாத அனுபவமுள்ள தமிழ் தட்டெழுத்து/ சுருக்கெழுத்தாளர் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். நேரம் காலை 9மணி முதல் 12 மணி வரை. (C/ 5424)

### வழமையான சேவை

மூன்று மொழிகளிலும் றபர் ஸீல், பிளாஸ்டிக் போட், விளம்பர போட்டும் செய்து கொள்ள ''வீம'' 104 ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம் தினசரி காலை 9 மணி முதல் பி. ப. 1 00 மணிவரை சேவை செய்கின்றது [14754]

### தவறிவிட்டது

வடிவேலு, சாந்தேஸ்வரி இல 715102609V அடையாள அட்டை 14 - 11 - 90 அன்று கச்சேரிக்கு அண்மையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 10 குடியேற்றத்திட்டம் றக்கா றோட் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (14771)

### டில்க்கா வாச் வேக்ஸ்
### [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலும் 3, சித்தன் கேணி வீதி, பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது: சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமதுவாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [சி/5402]

## சைவ சமய தீட்சை

யாழ்ப்பாணம், நவ. 16 யாழ். சைவ பரிபாலன சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'சைவசமயதீட்சை' வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### கலைப்பீடம்
### சிறப்புக்கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்

மேற்படி பயிற்சி நெறிக்கான இறுதி ஆண்டு சகல மாணவர்களும் தமது ஆய்வுக் கட்டுரையை 30-11-90க்கு முன்பாக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும்.

காலதாமதமாகச் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்.

(சி/5431)

## DIPLOMA IN NURSING
## தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

புதிய பிரிவு வகுப்புகள் ஆரம்பம்-
19. Nov. 1990

- ★ வெளிநாடு செல்வோருக்காக துரித பயிற்சி நெறி
- ★ இலவச ஆங்கில வகுப்புகள்
- ★ சிறந்த பாமஸி பயிற்சியுடன் கூடியது

விவரங்கட்கு.

## North Ceylon Technical Institute

14. சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5429)

## C.C.A.

[வெலிங்டன் சந்திக்கு அருகாமை]
மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

### கலை, வர்த்தகம்
### 90, 91, 92

நடைபெறுகின்றன

புதியபிரிவு ஆரம்பம்
சனி 17 - 11 - 90, 8.00 மணி

### A/L 90 Day Class

ஆரம்பம் 21 - 11 - 90
[வழமையான ஆசிரியர்குழு] [சி/5426]

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

### A/L 92
### கலை, வர்த்தகம்
### ஆரம்பம்: 17-11-90

சனி 8 00 A.M. [சி5418]

உ

ஆயாக்கடவை சித்தி விநாயகர் துணை

## தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்

அமரர்

### ● பிரம்மஸ்ரீ சிவா சோமசர்மா ●

அவர்கள்

(புன்னாலைக்கட்டுவன்)

அன்புடையீர்!

08- 11- 90 இல் வியாழன் இரவு சிவபதமடைந்த அமரர் பிரம்மஸ்ரீ சிவா சோமசர்மா அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இணுவில் பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர் அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

17- 11- 90 சனி பகல் 9 00 தசாகம்
18- 11- 90 ஞாயிறு பகல் 10. 00 ஏகோதிஷ்ட, மாசிக சிரார்த்தம்
19- 11- 90 திங்கள் 10 00 சபிண்டீகரணம்
20- 11- 90 செவ். பகல் 10 00 கிருகயக்ஞம்

உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் அனைவரும் இவ் வைபவங்களில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

அன்புடன்!
மனைவி, மகள், மகன்;

தகவல்: ந. வீரமணி ஐயர்,
பரராஜசேகரப் பிள்ளையார் வீதி,
இணுவில். (14297)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### விஜயவாணி பிரேம்நாத்

உதயம்: 30- 01- 1964
அஸ்தமனம்: 03-10-1990

எம்மையெல்லாம் தவிக்க விட்டு விட்டுத் திடீரென மறைந்து விட்ட அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்-

''லக்சுமி பவனம்''
70, [illegible]
யாழ்ப்பாணம்.
(14775)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்:
1906 - 5 - 12

விண்ணில்:
1990 - 10 - 7

### திருமதி ஆறுமுகம் கனகம்மா

7 - 10 - 90 இல் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு, உதவிகள் பல செய்த நண்பர், அயலவர், உறவினர் யாவருக்கும் எமது நன்றி.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மகன், மருமகள், பேரன், உற்றார், உறவினர்.

31, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். [14293]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்: 20 | 07 | 1932



விண்ணில்: 17 | 10 | 1990

### மயில்வாகனம் மகேந்திரன்

(உதவி ஆணையாளர் கலால் திணைக்களம்)
(EXCISE)

18 - 10 - 90 இல் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்து உதவிகள் பல செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்.

71/2, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். (14772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தற்கொலை முயற்சி

பிரதமரும் நிதி மந்திரியுமான டி பி விஜேதுங்கா, 1991 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரையை நேற்று நிகழ்த்தினார் அவரது வரவு-செலவு அட்டவணைப்படி பாதுகாப்பு அமைச்சுக்கு - பாதுகாப்புச் செலவுக்கு - 1170 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

நாட்டின் செலவினத்தில் இரண்டாவது ஆகக் கூடிய ஒதுக்கீடு இதுவாகும் மொத்தச் செலவில் 12.7 சத வீதமானது 1947 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிக நிதி ஒதுக்கீட்டில் பாதுகாப்பு அமைச்சு இரண்டாம் இடத்தைப் பிடித்திருப்பது இதுவே முதற்தடவை

''சிபறி'' என்ற சுவீடிஸ் நிறுவனம், உலக வங்கியின் தரவுகளை வைத்து 1988 ஆம் ஆண்டுக்கென வெளியிட்ட தனது சிந்திய அறிக்கையில், ஸ்ரீலங்காவின் பாதுகாப்புச் செலவினம் 30 7 சத வீதம் என்றும், வெளிநாட்டுக் கடன்களைக் கொண்டு செய்யப்படும் வேலைகளுக்கான செலவீனம் 24 2 சத வீதம் என்றும் தெரிவித்துள்ளது. அவ்வாறாயின் 1991 ஆம் ஆண்டுக்கான வீதங்கள் மேலும் உயர்ந்திருக்கும் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத விடயம்.

பாதுகாப்பு - இராணுவச் செலவு மட்டுமா உயர்ந்திருக்கிறது? இராணுவத்தின் ஆயுத, ஆளணிப் பலங்களும் பருத்துக் கொழுத்து விட்டன. ஆறு வாரங்களுக்கு ஒரு முறை 3,500 பேர் ஆயுதப்படைகளுக்குத் திரட்டப்படுகின்றனர். ஐரோப்பிய நாடுகள் என்றும் ஆசிய நாடுகள் என்றும் ஓடி, ஓடி பேசிப் பேசி ஆயுதங்கள், மற்றும் இராணுவ தளபாடங்கள் வாங்கப்படுகின்றன.

பாதுகாப்புச் செலவு அதிகரிக்கும் வேகத்தைவிட ஆளணி, ஆயுதபலம் உயர்ந்து செல்லும் வேகம் கூடுதலானது என்று இராணுவ நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். இந்தச் சிறிய நாட்டுக்கு இவ்வளவு பெரும் படையும், இத்தனை ஆயுதங்களும் தேவையா?

ஸ்ரீலங்காவில் நடப்பது போன்ற சண்டைகள் இராணுவ மொழியில் மூன்றாம் தரமான (Low Intensity Conflict) குறைந்த மட்டத்திலானவையாகக் கருதப்படுகின்றன. வளர்ந்து வரும் நாடுகள் உட்பட சர்வதேச மட்டத்தில் இந்த மூன்றாம் தர யுத்தங்கள் எதிர்வரும் காலத்தில் சர்வசாதாரணமாகி விடலாம் என்று உலக இராணுவ நிபுணர்கள் ஆருடம் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் பிரச்சினைகளை சமாதானமாகத் தீர்க்காவிடில் கடன்பெற்று இராணுவச் செலவுக்குப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்கெடுத்தும் அபாயம்உண்டு. இதனைப் பொருளாதார நிபுணர்கள் மட்டுமன்றி இராணுவ நிபுணர்களும் எச்சரிக்கைசெய்கிறார்கள். அந்த எச்சரிக்கையை ஸ்ரீலங்கா அரசு பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

இருபத்தோராம் நூற்றாண்டின் பிரச்சிணைகளால் நசிந்து, போக இப்போதே அது ஆயத்தமாகிறது! இது ஒரு தற்கொலை முயற்சி.

# திருமலை: 2 வீடமைப்புத் திட்டங்கள்

# அவசரம், அவசரமாக புனரமைப்பு

## புதிதாக சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறலாமென தமிழர் அச்சம்

திருகோணமலை, நவ 16

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பில் திருமலை மாவட்டத்தில் அவசர அவசரமாக இரண்டு குடியேற்றத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் புதிதாக குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அப்பகுதி தமிழ் மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

திருமலை மாவட்டத்தில் ஸ்ரீமாபுர, நெல்சன்புர ஆகிய குடியேற்றத் திட்டங்களில் உள்ள மொத்தம் 120 வீடுகளே அவசரம் அவசரமாகப் புனரமைப்பு செய்யப்படுகின்றன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு - கிழக்கு மாகாண முகாமையாளர் யாழ்ப்பாணத்தில் உள்ள காரியாலயத்தில் தற்போது கடமை புரிந்து வருகிறார்.

ஆனால் வடமேல் மாகாண முகாமையாளர், குருநாகல் மாவட்ட முகாமையாளர் ஆகியோரின் பொறுப்பில் மேற்படி குடியேற்றத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. என்றும் நிர்வாக ரீதியிலும் இது ஓர் அப்பட்டமான அத்துமீறல் எனவும் திருமலை தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்கால அசம்பாவிதங்களினால் திருமலையில் தமிழர்கள் வாழமுடியாத நிலையில்— துரத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில்— இக்குடியேற்றத்திட்டங்கள் புனரமைக்கப்படுவது சிங்கள மக்களைக் குடியேற்ற எடுக்கப்படும் முயற்சியே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ - 68)

## ஜனாதிபதி கருத்து கேட்கிறார்

வடக்கு - கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பது பற்றிய கருத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு மற்றும் செயற்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களிடம் இருந்து ஜனாதிபதி பிரேமதாஸா கோரியிருப்பதாகத் தெரிகிறது.

ஐக்கியதேசியக் கட்சியில் உள்ள சில தமிழ் உறுப்பினர்கள் நிரந்தர இணைப்பை ஆதரித்து கருத்துக்களை வெளியிட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-எ]

## நல்லெண்ணெய்யில் தரம் வகுப்பது சட்டப்படி குற்றம்

### உணவுப் பரிசோதகர் எச்சரிக்கை

காங்கேசன்துறை, நவ. 16

நல்லெண்ணெய்யில் தரம் வகுத்து நம்பர் 1, நம்பர் 2 என விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ் மாவட்ட உணவு-மருந்து பரிசோதகர் திரு. த. மகாதேவன் இப்படி எச்சரிக்கை செய்துள்ளார்.

யாழ்குடா நாட்டில் பல இடங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நல்லெண்ணெய் பரிசோதனை செய்யப்பட்ட சமயம் அதில் கலப்படம் செய்யப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நல்லெண்ணெயில் தரத்தை வகுத்து நம்பர் 1 எனவும், நம்பர் 2 எனவும் சில இடங்களில் விற்பனை செய்யப்படுவதை அவதானித்ததாகவும், நம்பர் 2 எண்ணெய்யில் மூழுக்க முழுக்க தேங்காய் எண்ணெய் கலந்திருந்ததாகவும் திரு. மகாதேவன் தெரிவித்தார்.

(இ-68)

## இனவிகிதாசார ஆட்சேர்ப்பு வழக்கு

## தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ 16

அரச திணைக்களங்களுக்கு இனவிகிதசார அடிப்படையில் ஆட்சேர்ப்பதும் மற்றும் பதவி உயர்வு வழங்குவதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனித அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பாகத் தீர்ப்பு வழங்குவதை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபம் அரசியல் சாசனத்தில் சகலருக்கும் வழங்கப்பட்ட சமத்துவத்தை மீறுகிறது என்று வழக்கில் மனுதாரரான சுங்கத் திணைக்கள அத்தியட்சகர் திரு: பி ராமுப்பிள்ளை கூறியிருக்கிறார்.

இவ்வழக்கின் விசாரணை பிரதம நீதியரசர் பரிந்தா ரணசிங்கா தலைமையிலான ஏழு நீதியரசர்கள் முன்னிலையில் நடைபெற்றது. [இ - எ]

## வாகன வரி செலுத்துமாறு வவுனியாவில் கெடுபிடி

வவுனியா, நவ. 16

வவுனியா நகரத்தில் உள்ள வாகனங்களுக்கு உரிய அனுமதிப்பத்திர வரிகள் செலுத்தப்படவேண்டும். அதை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

வவுனியாவில் உள்ள படையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொலீஸார் கடமையில் ஈடுபடுபவர் என்றும் வீதி யோர வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் படையினர் அறிவித்துள்ளனராம். (இ-3)

## ஆஸ்பத்திரி, அகதிமுகாம் ஆகியவற்றுக்கு வழங்க முடிவு

யாழ்ப்பாணம், நவ 16

கப்பலில் வந்த 12 தொன் ''சனட்டரி டவல்ஸ்'' ஆஸ்பத்திரிகளுக்கும், அகதிமுகாம்களுக்கும் வழங்கப்படவிருக்கின்றன.

புனர்வாழ்வு அமைச்சால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாகவே பொது மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுவந்தன.

நிவாரணப் பொருளாக அனுப்பப்பட்ட— வயதுவந்த மாதர்களுக்கு மட்டும் உபயோகப்படும் —'சனட்டரி டவல்ஸ்' பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியாததால், வைத்தியசாலைகளுக்கும், செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அகதிமுகாம்களுக்கும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த 12 தொன் சனட்டறி டவல்களையும் ஏற்றி அனுப்ப ஐந்து லொறிகள் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### 3 ஆம் கட்ட உலர் உணவு

பளைப்பகுதி மக்களுக்கான 3 ஆம் கட்ட உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (இ-117)

### வெற்றிலை வரத்து தடை

சாவகச்சேரிச்சந்தையில் வெற்றிலை 40 சதம் முதல் 50 சதம்வரைவிற்பனையாகிறது.

வலி வடக்கில் வான் தாக்குதலும் ஊரடங்கும் இருப்பதால் வெற்றிலை வரவு மிகக் குறைந்து விட்டது [இ - 31]

# இன்றைய நம்பிக்கைவாக்கெடுப்பில் வென்றாலும்

# சந்திரசேகரின் தலைவிதி ராஜீவ் கையில்!

*பிரதமர் சந்திரசேகரின் அரசு கொண்டுவந்துள்ள நம்பிக்கைப் பிரேரணையை விவாதிப்பதற்காக இந்திய நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் இன்று 16 ஆம் திகதி நடைபெறுகிறது. இதனை ஒட்டி இது பிரசுரமாகிறது*

கடந்த பத்தாம் திகதி பிரதமராக திரு. சந்திரசேகர் பதவி ஏற்றார்.

வெளியில் இருந்து முன் நிபந்தனை அற்ற ஆதரவை சந்திரசேகர் அரசுக்கு இந்திரா காங்கிரஸ் வழங்குகிறது.

### ஆதரவு அணி

சந்திரசேகரின் ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சியில் 61 எம்.பிக்கள் உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் [illegible] எம்.பிக்களும் அதன் [illegible] கட்சிகளில் 17 எம்பிக்களும் உள்ளனர்.

ஆகவே சந்திரசேகர் அரசுக்கு ஆதரவாக 273 எம்பிக்கள் தற்சமயம் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது

வி. பி. சிங் அணியைச் சேர்ந்த ஜனதா தள் எம்பிக்கள் சிலரும் ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று ஜனதா தள் (எஸ்) எதிர்பார்க்கிறது.

### எதிர்ப்பு அணி

நம்பிக்கைத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக ஜனதா தள் (சிங்) கட்சி, பாரதீய ஜனதாக் கட்சி, இடதுசாரிக்கூட்டணி (இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட், போர்வோர்ட் புளொக், புரட்சிகர சோஷலிசக்கட்சி தெலுங்கு தேசம் கட்சி அகாலி தள் (மான்) கட்சி ஆகியன பகிரங்கமாக அறிவித்துவிட்டன.

இதன்படி, 228 எம்பிக்கள் சந்திரசேகர் அரசுக்கு எதிராக வாக்களிக்க இருக்கின் [illegible] 28 எம்பிக்களில் பெரும்பாலானோர் சுயேட்சை வாதிகள். ஏனையோர் உதிரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

### உத்தரபிரதேசம் மீண்டும் சாதனை

கூட்டு எண் (பிறந்த திகதி) ஒன்பதைக் கொண்ட திரு. சந்திரசேகர், இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராகப் பதவி ஏற்றிருக்கிறார்.

**செய்திக்குப் பின்னால்**

சுதந்திரம் பெற்ற நாள் முதல் பிரதமர்களை உருவாக்கி வரும் உத்தரப்பிரதேச மாநிலம், சந்திரசேகரை வழங்கியதன் மூலம் அச்சாதனையைத் தொடர்ந்து நிலை நாட்டி வருகிறது.

1. 07. 1927 இல் விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் சந்திரசேகர் அரசியல் விஞ்ஞானத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். ஆசார்ய நரேந்திரதேவிடம் அரசியல் மாணவராகச் சேர்ந்தார்.

பிரஜ சோஷலிஸ்ட் கட்சி மூலம் அரசியலில் புகுந்தார்.

1964 இலே காங்கிரஸில் சேர்ந்த சந்திரசேகர், 1977 இல் அதனை விட்டு விலகினார். இந்திராவால் பின்னர் சிறை வைக்கப்பட்டார்,

சிறையில் இருந்து விடுதலையானவுடன் சந்திரசேகர் ''பிசாசுடன் வாழ்க்கை நடத்திவிடலாம். இந்திரா இருக்கும்வரை காங்கிரஸில் இருந்து அரசியல் நடத்த முடியாது''— என்று கூறிவிட்டு காங்கிரஸை விட்டு விலகினார்.

இன்று நிலைமை மாறிவிட்டது! இந்திராவின் புதல்வர் ராஜீவின் ஆதரவுடன் பிரதமராகி விட்டார்.

சந்திரசேகர் இன்று 16 ஆம் திகதி நடைபெறும் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றாலும் ராஜீவ் எப்போது கைவிடுவாரோ அன்று தொப் என்று வீழ்ந்து விடுவார். இது இந்திய அரசியலில் கடந்தகாலப்படிப்பினைகள்.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படை கைது செய்தோரை தமிழக அரசு விடுவித்துவிட்டது!

## இந்தியாவின் புதிய தளபதி வெளியிட்ட தகவல்

சென்னை, நவ. 16
பல்வேறு குற்றங்களுக்காக இந்திய கடற்படையாலும் கடலோரக் காவற்படையாலும் கைது செய்யப்பட்டு, தமிழகப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிகளை தமிழக அரசு விடுவித்துவிட்டது.

இந்திய கடற்படையின் புதிய தளபதியாக மாத இறுதியில் பதவி ஏற்க இருக்கும் ரியர் அட்மிரல் ராம்தாஸ் முன்கண்டவாறு குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

இதுகாலவரை கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக பணிபுரிந்த அட்மிரல் ராம்தாஸுக்கு சென்னையில் நேற்று பிரியாவிடை அளிக்கப்பட்டது.

அப்போது அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

பல குற்றங்களுக்காக இலங்கைத் தமிழ்ப் போராளிகளில் நூறுக்கு மேற்பட்டோரைக் கடற்படையும் கடலோரக் காவற்படையும் பிடித்து தமிழக பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தது. அவர்களை, இரண்டொரு தினங்களின் பின்னர் தமிழக அரசு விடுதலை செய்துவிட்டது.

அப்போராளிகள் உபயோகித்த படகுகள் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### அரசுதான் கண்டுபிடிக்க வேண்டும்

யார் அகதிகள், யார் போராளிகள் என்பதை மாநில அரசுதான் கண்டுபிடிக்க வேண்டும்.

நிலப்பகுதிக்கு ஒரு சட்டமும், நீர்ப்பகுதிக்கு ஒரு சட்டமும் என்று இருக்க முடியாது.

இலங்கைக் கடற்பகுதிக்குள் இந்திய மீனவர்கள் செல்வதால்தான் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு அவர்கள் ஆளாக வேண்டியுள்ளது.

கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்கலாம் என்று இந்திய மீனவர்கள் தவறாக எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

கச்சதீவுக்கு இந்தியர்கள் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மட்டுமே செல்லலாம்.

— இப்படித் தளபதி ராம்தாஸ் சொன்னார்.

தமிழ்ப் போராளிகள் தமிழகத்தினுள் நுழையவில்லை என்று தமிழக அரசு அடிக்கடி சொல்லிவரும் இத்தருணத்தில், கடற்படைத் தளபதி ராம்தாஸ் இப்படி தமிழக அரசைக் குற்றஞ்சாட்டியிருப்பது முக்கியத்துவம் பெறுவதாக இந்திய வானொலி அறிவித்தது. [உ-எ]

## யாழ். ஆஸ்பத்திரி மீது தாக்குதல் நடத்தவில்லையாம்

### சிறில் ரணதுங்கவும் மறுப்பு

யாழ்ப்பாணம், நவ. 16
யாழ். போதனா ஆஸ்பத்திரி மீது விமானத் தாக்குதல் நடத்தவில்லை.

- இப்படி கூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க.

யாழ். ஆஸ்பத்திரி மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கடந்த வெள்ளியன்று விடுத்த அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஆஸ்பத்திரிகள் மற்றும் பாடசாலைகள் மீது தாக்குதல்களை நடத்தக்கூடாது என்று ஆயுதப்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (உ-எ)

## மட்டு நகரில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், நவ. 16
கடந்த புதனன்று மட்டக்களப்பு முகத்துவாரத்தில் விடுதலைப்புலிகள் கைக்குண்டு வீசியதில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமுற்றார்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. [உ]

## மாவிட்டபுரத்தில் இருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 16
நேற்று முன்தினம் (புதன்) மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்ற நேரடி மோதல்களின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான பராசக்தி [மகேந்திரன் மாலினிதேவி — சாவகச்சேரி], முஸ்தபா [கிட்ணர் சந்திரசேகரம்—புத்தூர்] ஆகியோர் வீரமரணமடைந்தவர்.

முஸ்தபாவின் புகழுடல் புத்தூரில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்படும். [ஒ]

## அருள் - 89 தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 16
வவுனியா பாவற்குளம் முதலாம்யூனிட் இராணுவ முகாமிலிருந்து ஐநூறுயார் தூரத்தில் அமைந்துள்ள காவல் அரண்மீது கடந்த புதனன்று விடுதலைப் புலிகள் ''அருள்-89'' ஷெல் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 16
கடந்த புதனன்று இடம்பெற்ற இரு விபத்துச் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான கண்ணன் (நாராயணசாமி செல்வக்கிருஷ்ணன் - சுழிபுரம்), அமலன் (செல்வராசா கேதீஸ்வரன் - ஆனைக்கோட்டை) ஆகியேர் மரணமடைந்தனர். (உ)

## கைதாகினர்

சினன்குடா கிளப்பன்பேர்க் அகதி முகாமில் இருந்த தமிழ் அகதிகள் பலர் கடந்த திங்களன்று படையினரால் கைது செய்யப்பட்டனர்.

ஆண், பெண் இருபாலருமாக - குழந்தைகள் உட்பட - 15 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஐந்து பெண்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அவரது ஒன்றுவிட்ட மகளான சி. தவமலர் (23 வயது) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் ஆவர்.

இவர்களது குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு பெண்ணான ஐ. சிவகுசலா (20 வயது) கால் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவர் இறந்த இரு சகோதரிகளின் தங்கையாவார்.

கருங்காலியைச் சேர்ந்த தியாகராஜா நாகதர்ஷினி (8வயது), வேம்படியைச் சேர்ந்த ச. செல்வராணி லதா (16 வயது) ஆகியோர் ஷெல் தாக்குதலினால் உயிரிழந்த ஏனைய இருவரும் ஆவர்.

பணற்காடு, ஆலடி, வேம்படி, சிவகாமி அம்மன் கோவிலடி, கருங்காலி, 'வியாவில் ஆகிய குடியிருப்புப் பகுதிகளை நோக்கியே ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இப்பகுதிகளில் பலர் காயமடைந்தனர். யாழ்ப்பாணம், மானிப்பாய் மூளாய் ஆஸ்பத்திரிகளில் இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆபத்தான நிலையில் வியாவிலைச் சேர்ந்த திருநாவுக்கரசு முருகதாஸ் [வயது 9] என்பவரும் மற்றும் ஆலடியைச் சேர்ந்த மோகனதாஸ் விஜிதா [வயது 7], சதாசிவம் கண்மணிதேவி [வயது 36], சதாசிவம் செல்வராணி [வயது 15], சதாசிவம் கமலராணி [வயது 9], தில்லைநாதன் கஜேந்திரராஜா [வயது 5], தில்லைநாதன் மீனாம்பாள் வயது 10], தில்லைநாதன் நாகதர்ஷினி (வயது 4), கருங்காலியைச் சேர்ந்த நடராஜா என்பவரின் எட்டு வயது மகள், தர்மராஜா சரோஜாதேவி (வயது 17), நம்பாவில் ஒழுங்கையைச் சேர்ந்த தனேஸ்வரி (வயது 22), வியாவிலைச் சேர்ந்த திருநாவுக்கரசு செல்லம்மா (வயது 33), விக்காவிலைச் சேர்ந்த மார்க்கண்டு ரவிக்குமார் (வயது 21) ஆகியோரும் காயமுற்றவர்களில் அடங்குவர். (உ-ஒ-3-15)

## கிளிநொச்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அதனால் கொழும்பில்இருந்து கிளிநொச்சிக்கு லொறிகள் வரமுடியவில்லை -

அதனாலேயே முல்லைத்தீவுக்கு கப்பல்மூலம் கொண்டு வந்து கிளிநொச்சிக்கு எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியை கோரியுள்ளோம். -என்று அந்த அதிகாரிவிளக்கினார்.

இதேவேளை -
கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாதாந்தம் 800 தொன் உணவுப் பொருள்கள்தேவை.

ஆனால் ஜூன் மாதம் முதல் ஆறு மாதங்களுக்குத் தேவையான 4,800 தொன் உணவுப் பொருள்களில், ஆறு தடவைகள் லொறிகள் மூலம் எடுத்துவரப்பட்ட உணவு 600 தொன் மட்டுமே - என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-3)

## காரைநகர் குடியிருப்பு...

முன்னேற முயன்ற படையினரை விடுதலைப்புலிகள் தடுத்து நிறுத்தி தாக்கிய போது கடும் மோதல் மூண்டது.

நீண்ட நேரம் இடம்பெற்ற இந்த மோதலில் ஆறு சிப்பாய்கள் உயிரிழந்ததாகவும்- மோதல்களை அடுத்து படையினர் முகாமுக்கு பின்வாங்கியதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதலில் லெப்டினன்ட் சுபராஜ் [நவரட்ணம் பரஞ்சோதி - கரபூமி] வீரமரணமடைந்தார்.

முன்னேற முயன்ற படையினரில் பலர் விடுதலைப் புலிகள் அப்பகுதியில் வைத்திருந்த மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தின் போது றம் மகஸீன் -4, ஐ. எம். ரவைகள் -150, கிற்பாக் -1 ஆகியவை தங்களால் மீட்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

மோதல்களை அடுத்து முகாமுக்கு பின்வாங்கிய படையினர் அங்கிருந்து காரைநகரில் மக்கள் குடியிருப்புகள் உள்ள பகுதிகளை நோக்கி கண் மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

படையினரின் ஷெல் குண்டுகளுக்கு இலக்காகி ஐந்து பெண்கள் உயிரிழந்தனர். பதினைந்துக்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர்.

ஹெலிக்கொப்டர் ஒன்றும் வட்டமிட்டவாறு குடியிருப்புப் பகுதிகள் மீது அகோரத் தாக்குதலை நடத்தியது.

ஹெலி, மற்றும் ஷெல் தாக்குதல்களினால் 25 இற்கும் அதிகமான வீடுகள் சேதமுற்றன.

ஆலடி சிவகாமி அம்மன் ஆலயம் யாழ்டரன் கல்லூரி ஆகியவையும் சிறிது சேதம் அடைந்தன. (உ-ஒ-15-3)

## சென்ட்ரல்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
-5, எஸ். எல். ஆர். -1, 84 எஸ் ரக துப்பாக்கி -1, இரவுப் பார்வைச் சாதனம் -1, பைனாகுலர் -1, ஏ. கே. மகஸின் -3, ஐ. எம். ரவைகள் -1600, நேட்டோ ரவைகள் -125, ஏ. கே. ஹோல்ஸர் -3, 5 56 ரவைகள் -140, ஜே. ஆர் ரக கிரனேட் -1, மிலிட்டரி பெல்ட் -1, சப்பாத்து -1 சோடி, தொப்பி -5, கிற்பாக் -1, தலைக் கவசம் -5. [உ]

## கிழக்கு அரச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஊழியர்களுக்கு கொடுமை'' ''யுத்தத்தை உடனே நிறுத்து, தமிழருக்கு உரிமையை சீராய்கொடு'' ''சூரியன் சுழன்றால் இருட்டு, நீ உரைத்தால் உருட்டு,'' போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஊர்வலம் பகல் ஒரு மணி அளவில் யாழ் செயலகத்தை சென்றடைந்தது. நீண்ட மகஜர் ஒன்று மேலதிக அரச அதி [illegible] [ஒ 3]

## வரணி உட்பட...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
போட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை.

ஹெலியும் இப் பகுதிகளில் கண்டபடி தாக்குதல்களை நடத்தியது. ஹெலியில் இருந்து ரொக்கட் வீச்சும் மேற்கொள்ளப்பட்டது.

### வான்மீது தாக்கு

சாவகச்சேரியில் இருந்து பளைக்குச் சென்றுகொண்டிருந்த மினிவான் மீது கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்துக்கு அருகில் வைத்து ஹெலி தாக்குதலை நடத்தியது.

வானில் இருந்த சிறுவன் ஒருவன் சிறு காயங்களுக்கு இலக்கானான்.

நேற்றுக் காலை 6 மணிக்கு ஆரம்பித்த விமானத் தாக்குதல் சுமார் 7. 30 மணிவரை தொடர்ந்தது. அதனை அடுத்து சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. சாவகச்சேரியில் சந்தையும் கூடவில்லை. (ஒ-117)

## பிலிப்பீன்ஸில் நிலநடுக்கம்

மணிலா, நவ 16
பிலிப்பீன்ஸில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. சேத விவரங்கள் வெளியாகவில்லை.

## பட்ஜட்-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கப்பட்டிருக்கிறது.

★ டிரவலர்ஸ் காசோலை மீதான முத்திரை வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது

★ வருடம் ஒன்றுக்கு 42 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாக சம்பளம் பெறும் தனியார் துறை ஊழியருக்கு வருமான வரியில் இருந்து முற்றாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

★ மண்வெட்டி, மருந்து வகைகள் மற்றும் ட்ராக்டர்களுக்கு தேவையான மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

★ விமானநிலையக் கட்டணம் 350 ரூபாவிலிருந்து 400 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ வெளிநாட்டில் தங்கி விட்டுவருவோருக்கு அளிக்கப்பட்ட தீர்வை விலக்கு அளிக்கப்படும் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

1. ஒரு வருடம் - 25,000 ரூபாவிலிருந்து 50,000 ரூபாவுக்கு
2. மூன்று மாதம் - 5,000 ரூபாவிலிருந்து 12,500 ரூபாவுக்கு
3. மூன்று மாதங்களுக்குக் குறைவான காலம் - 3,500 ரூபாவிலிருந்து 7,500 ரூபாவுக்கு

★ வங்கிகள் மீதான வியாபார மொத்த வரி 5 வீதத்திலிருந்து 4 வீதத்துக்கு குறைக்கப்பட்டது. [அ-எ]

## யாழ். ஆஸ்பத்திரி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிட்ட அளவு இரத்தமே சேமித்து வைக்கப்படுகிறது

இரத்தம் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது போதுமான இரத்தம் கிடைப்பது கஷ்டமாகவுள்ளது.

அதனால் தேவையைக் கருதிஉடனுக்குடன் இரத்ததானம் செய்வோரைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

காரைநகரில் இடம்பெற்ற சம்பவங்களில் படுகாயமுற்றவர்களுக்கு இரத்தம் தேவைப்படுவதாக இரத்தவங்கி தெரிவித்ததைத் தொடர்ந்து உதயன் ஊழியர்கள் பத்துப் பேர் நேற்று இரத்ததானம் செய்தனர். (அ-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org